வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
தவணைப் பரீட்சை, ஆறாம் தவணை- 2020
Conducted by Field Work Centre, Thondaimanaru
In Collaboration with Provincial Department of Education Northern Province
6th Term Examination, - 2020

FWC

| கிறிஸ்தவம் - I<br>Christianity - I | Two Hours<br>Gr. 13 (2020) | 43 | T | I |
|---|---|---|---|---|

**மிகச்சரியான விடையைத் தெரிவு செய்து தரப்பட்டுள்ள புள்ளடித்தாளில் புள்ளடி இடுக.**

1. திருவிவிலியம் கிறிஸ்தவர்களாகிய எமக்கு உன்னதமான நூலாகும் ஏனெனில்
   1) இறை ஏவுதலால் எழுதப்பட்டுள்ளது.
   2) இறைவார்த்தை அதனுள் உள்ளடக்கப்பட்டுள்ளது.
   3) இறைவன் அதன் ஆசிரியராக உள்ளார்.
   4) இறைவனும் மனிதனும் இணைந்து எழுதியுள்ளனர்.
   5) கிறிஸ்தவர்களுக்கு மட்டுமே உரித்தானது.

2. வுல்காத்தா - வல்கேற் என்பதன் பொருள்
   1) பொது மக்களின் பிரதி 2) எபிரேயப் பிரதி 3) வெளிப்படுத்தல்
   4) நூல்களின் தாய் 5) இறை வழிநடத்தல்

3. இறைசெய்தியை அறிவிப்பதற்காக வழங்கப்படுவது போதனைக்கான இறை ஏவுதல் ஆகும். இதனைப் பெற்றுக் கொண்டவர்கள்.
   1) அரசர்கள் 2) நீதித்தலைவர்கள் 3) மக்கள்
   4) இறைவாக்கினர் 5) ஆதிப்பிதாக்கள்

4. யூதாவின் மக்கள் தங்கள் குலத்தின் அரசராகத் தாவீதைத் திருப்பொழிவு செய்த இடம்
   1) எருசலேம் 2) பெத்தலகேம் 3) எபிரோன்
   4) பெத்தேல் 5) சமாரியா

5. இயேசுவின் மறைப்பணியின் கேந்திர நிலையமாகக் காணப்படும் இடம்
   1) கலிலேயா 2) யூதேயா 3) சமாரியா
   4) யோர்தான் மலைத்தொடர் 5) யோர்தான் ஆற்றுப்பள்ளத்தாக்கு

6. ‘இஸ்ரயேல் மக்களோ குழந்தைவளம் பெற்றுப்பலுகிப் பெருகி எண்ணிக்கையில் உயர்ந்தனர்.’ இதன் மூலம் இறைவன் ஆபிரகாமிற்கு கொடுத்த எந்தவாக்குறுதி நிறைவேற்றம் பெற்றது.
   1) நிலையான நாட்டைக் கொடுத்தல். 2) உடன்படிக்கையின் அடையாளமாகுதல்
   3) அர்ப்பணிக்கப்பட்ட மக்கள் கூட்டம் 4) பெரிய இனத்தை உருவாக்குதல்
   5) அடிமை வாழ்வின் விடுதலை

7. சாதாரண மேய்ப்பர்களாக வாழ்ந்த இஸ்ரயேல் மக்கள் இறைவனுக்கு சொந்தமான அரச, குருத்துவ, தூய மக்களாக மாற்றியது.
   1) அபிரகாம் - இறைவன் உடன்படிக்கை
   2) ஆபிரகாம் - அபிமெலக்கு உடன்படிக்கை
   3) மோசே - இறைவன் உடன்படிக்கை
   4) யாக்கோபு - இறைவன் உடன்படிக்கை
   5) சீனாய் உடன்படிக்கை

agaram.lk

8. இஸ்வரயேல் மக்களை துன்புறுத்திய கானானிய மன்னன் யாபினையும் அவன் படைகளையும் பாராக்கின் உதவியுடன் வெற்றி கொண்ட நீதித்தலைவர்

1) கிதியோன் 2) தெபோரா 3) ஒத்னியேல்
4) இப்தா 5) அபிமெலக்

9. கடைசி நீதித்தலைவராகவும், இறைவாக்கினராகவும் இஸ்ரயேல் வரலாற்றில் காணப்பட்ட ஒருவர்

1) ஏலி 2) எலியா 3) சாமுவேல்
4) எசாயா 5) மீக்காயா

10. 'இவரிடமிருந்த தலைசிறந்த ஞானத்தின் வெளிப்பாடாக சிறந்த இலக்கியங்கள் உருவாக்கம் பெற்றன.' இக்கூற்றுடன் தொடர்புடைய அரசர்.

1) சவுல் 2) தாவீது 3) ரெகபெயாம்
4) ஆகாப் 5) சாலமோன்

11. சமய, சமூகசீர்திருத்த நடவடிக்கைகளில் தீவிரமாக செயற்பட்ட யூதா தேசத்தின் அரசன்

1) யோசியா 2) யோயாக்கீம் 3) அபியா
4) செதேக்கியா 5) ஆகாசு

12. பபிலோனியாவில் இருந்து எருசலேம் திரும்பிய இஸ்ரயேல் மக்கள் மத்தியில் குருவாகவும், திருச்சட்ட வல்லுநராகவும் பணியாற்றியவர்.

1) நெகேமியா 2) எஸ்ரா 3) சாமுவேல்
4) யோபு 5) எசேக்கியேல்

13. திருவிவிலியத்தின் செப்துவாஜிந்த் பிரதி உருவாக்கப்பட்ட ஆட்சிக் காலம்

1) பாரசீகம் 2) பபிலோனியா 3) எகிப்து
4) அசீரியா 5) கிரேக்கம்

14. இயேசுவின் பிறப்பின் பின் பெத்தலகேமிலும் அதன் சுற்றுப்புறமெங்கும் இரண்டு வயதிற்குட்பட்ட ஆண் குழந்தைகளை கொலை செய்யும் படி கட்டளையிட்ட அரசன்

1) ஏரோது அந்திபாஸ் 2) ஏரோதுபிலிப்பு 3) அர்க்கலாவு
4) பெரிய ஏரோது 5) சைரஸ்

agaram.lk

15. என்னைத்தவிர வேறு தெய்வங்கள் உனக்கிருத்தல் ஆகாது எனும் கடவுள் தந்தகட்டளையை வெளிப்படுத்தும் மரபு

1) யாவே 2) இணைச்சட்டம் 3) எலோகிம்
4) குரு 5) யாவே, குரு

16. நன்மை தீமை அறியும் மரம் என்பது எதனைக் குறிப்பிடுகின்றது

1) சாகாவரம் 2) வாழ்வின் பாதை 3) இறை அதிகாரம்
4) கடவுளின் திட்டம் 5) சுதந்திரமாக முடிவெடுக்கும் ஆற்றல்

17. ஆதிப்பெற்றோருக்கு கடவுள் தோலினால் ஆடைகள் செய்து அணிவித்தார். இதன் மூலம் நாம் அறிந்து கொள்வது

1) கடவுள் பாவத்தை வெறுக்கிறார் பாவிகளை அன்பு செய்கிறார்.
2) கடவுள் பாவத்தையும் பாவிகளையும் வெறுக்கிறார்.
3) கடவுள் பாவத்தை ஏற்றுக் கொள்கின்றார் பாவிகளை வெறுக்கிறார்.
4) கடவுள் பாவத்தையும் பாவிகளையும் அன்பு செயகிறார்.
5) கடவுள் மனந்திரும்பும் பாவிகளை மட்டும் கருணை காட்டுகிறார்.

18. உன் ஒரே மகனையும் எனக்குப் பலியிட நீ தயங்கவில்லை நீ கடவுளுக்கு அஞ்சுபவன் என நான் அறிந்து கொண்டேன் என ஆண்டவரின் தூதர் கூறியது.
1) மோசே 2) ஆரோன் 3) செக்கரியா
4) ஆபிரகாம் 5) யாக்கோபு

19. இறைவனின் முகத்தை நேரில் கண்டும் உயிர் தப்பிப் பிழைத்தேன் என யாக்கோபு கூறிய இடம்
1) எபிரோன் 2) லூசு 3) பெனியேல்
4) காரான் 5) கானான்

20. எகிப்தில் இஸ்ரயேல் மக்கள் அடிமைகளாக இருந்த போது எகிப்தினை அரசாண்ட மன்னன்
1) நபுக்கோதனசார் 2) இராம்சேஸ் 3) சைரஸ்
4) எப்பிபானுஸ் 5) பொம்பே

21. யூதாவை அரசாண்ட பெரிய ஏரோதுவின் மகன், ஆளுநர் அர்க்கலாவு பதவி நீக்கம் செய்யப்பட்டமைக்கான காரணம்
1) சுகயீனமடைந்திருந்தமை
2) கிரேக்கர்களுக்கு ஆதரவு வழங்கியமை
3) இவரது கொடுங்கோல் ஆட்சிபற்றி யூதர்கள் உரோமைப் பேரரசனுக்கு முறைப்பாடு செய்தமை
4) எருசலேமில் அந்நிய தெய்வ வழிபாட்டை ஊக்குவித்தமை
5) திருமுழுக்கு யோவானை கொலை செய்தமை.

22. இஸ்ரயேல் மக்களை வழிநடத்திய நீதித்தலைவர்களுக்கு வழங்கப்பட்ட பணி அல்லாது.
1) முரண்பாடுகளைத் தீர்த்தல்
2) சமூகத்தில் ஒழுங்கினை நிலை நாட்டுதல்
3) ஓரிறைக் கோட்பாட்டினை வலியுறுத்தல்
4) அந்நிய படை யெடுப்புக்களிலிருந்து விடுவித்தல்
5) எருசலேம் ஆலயம் சென்று பாஸ்கா விழா கொண்டாட ஊக்கமளித்தல்.

agaram.lk

23. செலஸ்தியர் எனும் யூததீவிரவாதிகள் யாருக்கு எதிராகக் கலகம் செய்தனர்
1) ஏரோதியர் 2) கிரேக்கம் 3) சமாரியர்
4) உரோமைப் படையினர் 5) எஸ்சேனியர்

24. பின்வருவோருள் ஒரே குழுவில் உள்ளடக்கப்பட முடியாதவர்கள்
1) சதுசேயர் 2) அரசர்கள் 3) பரிசேயர்
4) மறைநூல் அறிஞர்கள் 5) எஸ்சேனியர்

25. எருசலேம் சங்கம் கூட்டப்பட்டமைக்கான காரணம்
1) ஓய்வு நாளில் நோன்பு இருத்தல் பற்றி ஆராய்தல்
2) போலி இறைவாக்கினர்களை இனங்காணுதல்.
3) சபையில் புதிதாக இணையும் பிறஇனத்தவர் விருத்தசேதனம் செய்ய வேண்டுமா? என்பதற்கான தீர்வினைத் தேடுதல்
4) இறந்தோரின் உயிர்ப்பு குறித்த ஆராய்வு
5) இரண்டாம் வருகை பற்றி ஆராய்தல்

26. A – மரணபயத்தினால் கிற்ஸ்தவர்களில் பலர் விசுவாசத்தினைக் கைவிட்டனர்.
B - கிறிஸ்தவர்கள் உரோமைப் பேரரசைக் கவிழ்ப்பதற்கு சதித்திட்டம் தீட்டினர்
C - திருச்சபை பலமடைந்து வேகமாகப் பரவியது.
D – கிறிஸ்தவர்கள் விசுவாசத்திற்கு சாட்சி பகிர்ந்தனர்
E – திருச்சபைக்குள் விசுவாச வீரர்கள் உருவாகினர்
இவற்றுள் உரோமைய கலாபனைகளின் காரணமாக ஏற்பட்ட விடயங்கள் யாவை?
1) A, B, C 2) B, D, E 3) A, C, E
4) C, D, E 5) A, D, E

27. 'மரியா இறைவனின் தாய்' எனப் பிரகடனப்படுத்திய பொதுச் சங்கம்
1) எபேசு 2) நிசேயா 3) கல்செடோன்
4) கொன்ஸ்தாந்திநோபின் 5) காத்தேஜ்

28. புனிதபவுல் பற்றிய பின்வரும் கூற்றுக்களுள் சரியானது
A – அரமெயிக் மொழி பேசிய யூதன்
B – யூத – உரோம குடியுரிமை பெற்றவர்
C – யூத சட்டங்களையும், பாரம்பரியங்களையும் அறிவித்தவர்
D – புற இனத்தவரின் திருத்தூதர்
E – யூல குலத்தை சார்ந்தவர்
1) A, B, C 2) A, C, D 3) B, C, E
4) C, D, E 5) B, C, D

29. தலைவன் பணியாளனாக மாற வேண்டும் எனும் இயேசுவின் போதனை செயல் வடிவம் பெற்ற நிகழ்வு
1) திருமுழுக்கு 2) இறுதி இராவுணவு 3) சிலுவைப்பலி
4) கெத்சமனே விண்ணப்பம் 5) எருசலேம் பவனி

agaram.lk

30. இயேசுவின் சிலுவையின்மேல் எழுதி வைக்கப்பட்டிருந்த வாக்கியம்
1) இவன் யூதரின் அரசன் 2) இவர் மெசியா 3) விடுதலை வீரன்
4) உரோமைய கிளர்ச்சியாளர் 5) கடவுளின் மகன்

31. மார்டீன் லூதரின் வாழ்வுடன் பொருந்தாத கூற்று
1) விசுவாசத்தினால் மட்டும் நீதிமானாக முடியும்
2) பரிபூரணபலன் என்பதற்கு எதிராகப் போதித்தார்
3) மறைக்கல்வி நூல் வினா விடை வடிவத்தில் அமைந்திருந்தமை
4) திருமுழுக்கு, உறுதிபூசுதலை மட்டும் திருவருட்சாதனங்களாக ஏற்றுக் கொண்டார்
5) ஜேர்மன் நாட்டை சேர்ந்த அகுஸ்தினார் சபை துறவி.

32. சிலுவைப் போர் முன்னெடுக்கப்பட்டமைக்கான முக்கிய காரணம்
1) இஸ்லாமியரைத் தண்டித்தல்
2) இஸ்லாமியர் கைப்பற்றிய புனித பூமியின் இடங்களைக் மீளப் பெறுதல்
3) திருத்தந்தையரின் கட்டளை
4) இஸ்லாமிய நாடுகளில் கிறிஸ்தவத்தைப்பரப்புதல்
5) நாடுகளைக் கைப்பற்றி அடிமைப்படுத்துதல்

33. யாக்கோமே கொன்சால் வெஸ் அடிகளார் நூல்களை எழுதாத மொழி

1) ஆங்கிலம் 2) சிங்களம் 3) தமிழ்
4) ஒல்லாந்து 5) போர்த்துக்கேயம்

34. நிறைவுகாலம் பற்றிய போதனையில் ஆயத்தமாக இருக்க வேண்டும் என்ற தேவை எடுத்துக்காட்டப்படும் உவமை

1) புளிப்புமா 2) கடுகுவிதை 3) தோழியர்பத்துப்பேர்
4) புதையல் 5) வலை

35. மறு மலர்ச்சிககாலத்தில் உருவான சில நூல்கள்

A – கார்மேல் மலை ஏற்றம் B – உள்ளகமாளிகை
C – நிறைவாழ்வின் வழி D - இருண்ட இரவு
E – ஆன்மீகப்பாடல்

இவற்றுள் புனித சிலுவை யோவானால் (அருளப்பர்) எழுதப்பட்ட நூல்கள்

1) A, B, C 2) A, C, E 3) B, C, D
4) C, D, E 5) A, D, E

36. பிரித்தானிய ஆட்சிக்காலத்தில் இலங்கையில் மதச் சுதந்திரம் வழங்கிய ஆளுநர் யார்?

1) சோல்பரி 2) ஜேம்ஸ் ஸ்டுவார்ட் 3) பிறெட்றிக்நோத்
4) தோமஸ் மெயிற்லன்ட் 5) பிலிப் மிராண்டா

37. திருச்சபையின் மறுமலர்ச்சிக்கு உதவிய இயேசு சபையின் ஸ்தாபகர்

1) புனித வின்சென்றதே பவுல்
2) புனித லொயோலா இக்னேசியஸ்
3) புனித அவிலா திரேசா
4) புனித சிலுவை யோவான்
5) புனித பிரான்சிஸ் அசீசி

agaram.lk

38. வில்லியம்பூத் என்பவரால் ஆரம்பிக்கப்பட்ட சபை

1) இரட்சணிய சேனை 2) மெதடிஸ்த சபை 3) இங்கிலாந்து சபை
4) லூத்தரன் சபை 5) தென்னிந்திய திருச்சபை

39. ஜேர்மனியின் திருத்தூதர் என அழைக்கப்பட்டவர்

1) புனித கொம்பா 2) புனித ஆன்ஸ்கார் 3) புனித ஊல்ப்காங்
4) புனித பெனடிக் 5) புனித பொனிபஸ்

40. உரோமைய தேவதைகளை வணங்க வேண்டும் என கட்டாயப்படுத்திய அரசன்

1) பேரரசன் நீரோ 2) பேரரசன் தொமீசியன் 3) பேரரசன் திராஜன்
4) பேரரசன் தேசியுஸ் 5) பேரரசன் தியோக்கினிசியன்

41. போர்த்துக்கேயர் காலத்தில் மறைத்தூதுப்பணியில் ஈடுபடுவோரை பாதுகாத்தல், நலன் பேணுதல் ஆகிய பொறுப்புக்களை ஏற்று செயற்பட்ட பாதுகாப்புத் திட்டம்

1) வாழ்வும் பணிக்குமான இயக்கம்
2) கிறிஸ்தவ சபைகளின் சம்மேளனம்
3) எதிரிகளிடமிருந்தான பாதுகாப்புச்சட்டம்
4) பத்றோ ஆடோ ஒப்பந்தம்
5) கோல்புறாக் ஆணைக்குழு

42. திருத்தந்தை 13ஆம் சிங்கராயரினால் சமூகநலனை மேம்படுத்தும் நோக்கில் எழுதப்பட்ட சுற்றுமடல்
1) அன்னையும் ஆசிரியையும்
2) தொழிலாளிசாசனம்
3) இறைநடுநிலையாளர்
4) விசுவாசத்தின் மறைபொருள்
5) நற்கருணையின் புனிதத்துவம்

43. இரண்டாம் மறைத்தூதுப் பயணத்தில் பவுல் அக்கில்லாவையும் பிரிஸ்சில்லாவையும் சந்தித்தது.
1) பிலிப்பி
2) துரோவா
3) எதென்ஸ்
4) எபேசு
5) கொரிந்து

44. புனித தோமஸ் அக்குவைனாஸ் எனும் இறையியலானரை உருவாக்கிய துறவறசபை?
1) குளுனி
2) வின்சென்சியன்சபை
3) டொமினிக்கன் சபை
4) கார்மேல்சபை
5) புனிதபெனடிற்சபை

45. இலங்கையில் உதவிபெறும் பாடசாலையை ஆரம்பித்தவர்
1) அதிவண அன்றுமெலிசன்
2) அருட்திருஸ்ரீவன் செமேரியா
3) அருட்திரு மூச்செல்
4) அருட்தந்தை கிறிஸ்தோபர் பொன்ஜின்
5) ஆயர் ஹிலேரியன் சிலானி

46. கத்தோலிக்க திருச்சபையின் வளர்ச்சிக்காக முதன் முதலாக இலங்கைக்கு வருகை தந்த பெண்களின் துறவறசபை
1) சதாசகாய மாதா சகோதரிகள்
2) திருக்குடும்ப சகோதரிகள்
3) கார்மேல் சகோதரிகள்
4) பிரான்சிஸ்கன் சகோதரிகள்
5) இறைபராமரிப்பின் சகோதரிகள்

47. ஆதித் திருச்சபையில் புற இனத்தவர்கள் சேரஆரம்பித்து
1) நூற்றுவர்தலைவன் கொர்னேலியுவின் மனமாற்றத்தின் பின்
2) ஸ்தேவானின் மரணத்தின்பின்
3) பேதுருவின் முதல் அருளுரையின் பின்
4) பெந்தக் கோஸ்தெ நாளில் தூய ஆவியின் வருகையின்பின்
5) சவுல் தமஸ்குவில் மனமாற்றம் அடைந்தபின்

agaram.lk

48. பிலிப்பிஸ் பல்தேயுஸ் அடிகளார் மூலம் நிறைவேற்றப்பட்ட சிறப்பு வாய்ந்த பணி
1) பங்குகளின் நிர்வாகத்தை திட்டமிடல்
2) திருவழிபாட்டிற்கு தேவையான பாடல்களை எழுதினார்
3) மருத்துவப் பணியில் ஈடுபடுதல்
4) தோட்டப்பகுதிகளில் மறைபோதகப் பணியை விரிவடையசெய்தல்
5) மறை ஆசிரியர்களை (கற்றிகிஸ்ட்) பயிற்றுவித்தல்

49. திருச்சபைத் தந்தையரகளின் முக்கிய பணி
1) அப்பம் பிட்குதல்
2) இரக்கப்பணி
3) கற்பித்தல்
4) விவாதித்தல்
5) மறைத்தூதுப் பயணத்தில் ஈடுபடுதல்

50. திவ்வியநற்கருணை விருந்திற்கு முன்னர் அன்பின் (அகாபே) விருந்து நடத்துவது வழக்கமாக இருந்த சபை
1) கொரிந்து
2) தெசலோனிக்கா
3) கலாத்தியா
4) பிலிப்பியர்
5) உரோமை

(1 x 40 = 40 புள்ளிகள்)

வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
தவணைப் பரீட்சை, ஆறாம் தவணை- 2020
Conducted by Field Work Centre, Thondaimanaru
In Collaboration with Provincial Department of Education Northern Province
6th Term Examination, - 2020

FWC

| | | | | |
|---|---|---|---|---|
| கிறிஸ்தவம் - II<br>Christianity - II | Three Hours<br>Gr. 13 (2020) | 43 | T | II |

*மேலதிக வாசிப்பு நேரம் 10 நிமிடம்*

பகுதி I இலிருந்து இரண்டு வினாக்களையும் பகுதிII இலிருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.

## பகுதி I

1) i. திருத்தூதார் பவுலின் முதலாவது மறைத்தூதுப் பயணத்தில் பங்கு பற்றிய உடன் பணியாளர்கள் இருவரின் பெயர்களைப் பெயரிடுக? (2 புள்ளிகள்)

ii திருத்தூதர் பவுலின் இரண்டாவது மறைத்தூதுப் பயணத்தில் பிலிப்பியில் இடம் பெற்ற பிரதான சம்பவங்கள் இரண்டு எழுதுக. (4 புள்ளிகள்)

iii. எருசலேம் பொதுச் சங்கத் தீர்மானங்களுள் மூன்றினை எழுதுக? (6 புள்ளிகள்)

iv. திருத்தூதர் பவுலின் பணிகள் சிறப்பாய் அமைந்தமைக்கு அவரிடம் காணப்பட்ட சிறந்த ஆளுமைப் பண்புகள் நான்கினை எழுதுக? (8 புள்ளிகள்)

agaram.lk

2) i. இயேசுவின் மூலம் புதிய வாழ்வினைப் பெற்றுக் கொண்ட வரி வசூலிப்பவர்கள் இருவரைக் குறிப்பிடுக? (2 புள்ளிகள்)

ii. யூத மக்கள் செலுத்த வேண்டிய இருவகையான வரிகளைக் குறிப்பிடுக? (4 புள்ளிகள்)

iii. இயேசுவின் காலத்தில் யூதர்களுக்கும். சமாரியர்களுக்கும் இடையே நிலவிய முரண்பாடுகள் மூன்று எழுதுக? (6 புள்ளிகள்)

iv. யூத சமூகத்தில் பெண்கள் கீழ்நிலைப்படுத்தப்பட்டிருந்தனர் என்பதனை எடுத்துக் காட்டும் நான்கு விடயங்கள் எழுதுக. (8 புள்ளிகள்)

3) i. இறைவன் ஆபிரகாமுக்கு கொடுத்த வாக்குறுதிகள் இரண்டு தருக? (2 புள்ளிகள்)

ii. நீதித் தலைவரகளின் ஆட்சியில் காணப்பட்ட பலவீனங்கள் இரண்டினைக் குறிப்பிடுக? (4 புள்ளிகள்)

iii. இஸ்ரேலில் அரசாட்சி ஆரம்பித்தமைக்கான காரணங்கள் மூன்று எழுதுக? (6 புள்ளிகள்)

iv. தாவீது அரசனின் ஆட்சிக்காலத்தில் இஸ்ரயேல் தேசத்தில் இடம் பெற்ற நான்கு சமூக அபிவிருத்திகளை எழுதுக? (8 புள்ளிகள்)

## பகுதி II

4) i. திருச்சபையின் பிறப்பு இடம்பெற்ற விதத்தை பெந்தக் கோஸ்து நிகழ்வின் துணையுடன் ஐந்து விடயங்களை முன்வைத்து விபரிக்குக? (10 புள்ளிகள்)

ii. ஆரம்ப கிறிஸ்தவர்களின் வாழ்க்கை நிலை இன்றைய கிறிஸ்தவர்களுக்கு ஒரு சவாலாகும். ஐந்துகாரணிகள் முன்வைத்து விளக்குக? (10 புள்ளிகள்)

5) i. ஆபிரகாம் தனது வாழ்க்கையில் எதிர்கொண்ட சவால்கள் ஐந்தினை முன்வைத்துவிளக்குக? (10 புள்ளிகள்)

ii. இன்றைய சமுதாயத்தினைக் கட்டியெழுப்ப சீனாய் உடன் படிக்கை எவ்வாறு உதவுகின்றது 5 காரணிகளை முன்வைக்குக? (10 புள்ளிகள்)

6) i. தூய யோவான் நற்செய்தியின் ஆசிரியத்துவத்தையும், அந்நூலின் இயல்புகளையும் ஐந்தினை முன்வைத்து விளக்குக. (10 புள்ளிகள்)

ii. சமநோக்கு நற்செய்திக்கும் யோவான் நற்செய்திக்குமிடையேயான ஒற்றுமை வேற்றுமைகளை எழுதுக? (10 புள்ளிகள்)

7) i. ஒல்லாந்தர் ஆட்சிக்காலத்தில் இலங்கையின் முன்னேற்றத்தில் காணப்பட்ட சிறம்பம்சங்கள் ஐந்து தந்து விளக்குக? (10 புள்ளிகள்)

ii. யாக்கோமேகொன்சால்வேஸ் அடிகளார் மூலம் இலங்கைத்திருச்சபைக்கு ஆற்றப்பட்ட பணிகளை விளக்குக. (10 புள்ளிகள்)

8) i. விடுதலைப்பயணநிகழ்விற்கும் படைப்பின் இரண்டாவது கதைக்கும் இடையிலான தொடர்பினை விளக்குக? (10 புள்ளிகள்)

ii. உமது வாழ்வில் இறைபராமரிப்பு கிடைத்த சந்தர்ப்பத்தினை விளக்குக. (10 புள்ளிகள்)

agaram.lk